SUPPLEMENT TO THE BRAHMAVIDYA
ப்ரம்மவித்தியா பத்திரிகையின்
அநுபந்தம்.

புத் ௧] சிதம்பரம் ஏவிளம்பி௵ பங்குனி௴ ௨௫௳க்கு 1898௵ ஏப்ரல்௴ 6௳ [இல ௨௩.

வைதிகசந்திரமௌலி
மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்
முன்தொடர்ச்சி.

ஶ்ருதிஶிரோவைஷ்ணவைர்ஹ்மாஹோஹராஶ்ரமதித்ரய: ||

ஆச்சிரமங்கள் வைஷ்ணவம், ப்ராம்மம், சைவமென மூவகைப்படுமெனக் காட்டி எல்லாவற்றிற்கும் மேலானது அத்தியாச்சிரமமென்றனர். ஆதலால் விஷ்ணு ஆதிசக்தி முதலிய எந்த திவ்யமூர்த்தியை இடையே கொண்டு சுத்தாத்வைத கைவல்லியம் போதிப்பனவாயினும், அவைகள் யாவும் பிரமாணமென்றல்லவோ ! அவரது கருத்தாகவேண்டும்- அதற்கு மாறாக நிர்க்குண நிந்தையிலும் சகுணப்பிரசம்ஸையிலும் தாத்பர்யம் சொல்வது மகா பாதகமும் பரத்தில் கடுந்துயரந் தருவதுமான பேருண்மைப் புரட்டாம். இவ்வித விபரீதப் பகுபாடுகளையே ஓர் அஸ்திபாரமாகப்போட்டு மேல் இவர் எழுதுவதெல்லாம் சிற்பி சிறப்பாக ஒரு பெரிய செங்கல் வளைவுபோட்டிருக்க, நடுக்கல்லை (ஆப்புக்கல்லை)ப் பிடுங்கினால் அவைகளடையும் கதியையே அடையுமாயினும் அவற்றையும் வரிவரியாக விசாரித்திடுவாம். மேலே—

ஶ்ரவணமநநோபாஸநாநாமத்வைதவிஷயத்வாச்ச தபாஸநாயா: ப்ரத்யக்ஷஸாக்ஷாத்கார ஹேதுத்வாத்வைதவிஷயத்வமிவேத்யுபாஸநாஹேதுத்வம்|| உபாஸநாபரோக்ஷஸாக்ஷாத்காரத்வாத்வைதவிஷயத்வயோர்நிரூபணம் பரிஶிஷ்டே ஸ்பஷ்டம் ஸமாதிஶ்ருதௌ||

சிரவணம், மனனம், உபாஸநம் இவைகள் அத்வைதவிஷயங்களாகவே அவற்றின் முதிர்ச்சியில் அதன் பயனாகப்பிறக்கும் சாக்ஷாத்காரமும் அங்ஙனமேயாமெனக் கருதி (மூலத்தில்) வாஸனைகளாவென்றோம். உபாஸநம் அபரோக்ஷசாக்ஷாத்காரவேதுவும் அத்வைத விஷயமும் என்பதற்குப் பிரமாணம் இந்திரத் தும்னனுக்குக் கூர்மவசனம்.

'எல்லாச் சங்கங்களைவிட்டு உலகெல்லாம் மாயாமயமெனவறிந்து ஆன்மா வத்துவிதன் [ஏகனே] என்று பாவித்து அபரோக்ஷ சாக்ஷாத்காரம் பெறவாயென்றது.'

என்று நிரூபித்து அதிரகஸியதமஏகாத்துமவாதாத்துவித கைவல்லிய சுத்த வைதிக மோக்ஷ ஸாம்ராஜ்ய ராஜமார்க்கம் துவக்க, ப்ரம்மதத்துவத்தை விளக்கிய பரமகுருநாதனை சிவாத்துவிதவித்தியா பரமாசாரியரான ஸ்ரீமத் நீகஷிதநாதன் உபதேசித்த சர்வோபநிஷத் ஸாமரஸ்ய சித்தாந்தம், இவருக்கு இந்திரனது உபதேசம் விரோசனனுக்குப் பலித்தாற் போலாயது, எவ்வூழ்வினைப்பயனோ தெரிந்திலது. இவ்வுண்மையறிந்து உபநிடதங்களில் வீண் துர்விபாகம் செய்து, தமது புத்தியைக்கெடுக்காது ப்ரம்மமே ஸத்யம், ஜடஜீவேசுவரர்கள் அதனிடம் அதிட்டானத்தே மாயாவித்தைகளாற் கற்பிதம், அனிர்வசனியமானது மாயையாகவே, ஆத்மாவென்றும் நித்திய சுத்தபுத்தபரிபூரண சச்சிதானந்தம். அது ஒன்றேயன்றிப் பல கூடாது. பலவில்லை. வேதாந்தங்கள் யாவும் ஏகான்மாவையே குறிக்கின்றன. குணபேதம்பற்றி ஈசுவரபேதம் கூறியவாறு உபாதிபேதங்கொண்டு ஜீவபேதம் கூறப்படினும் அவை உபசாரோக்தி, ஜடஜீவேசுவரபேத சகிதோபாசனைகளைக் குறிக்கும் சாஸ்திரங்கள் மந்தமத்தியமாதிகாரிகளுக்கே. உத்தமாதிகாரிகளுக் காத்தும கைவல்யநிரூபகமான சுத்த வைதிகைகாத்துமவாத சாஸ்திரமே உரியது. அதனூற்றூன் கடவல்லியில் கர்மோபாசனைகளைக் கீழ்ப்படியிற் காட்டி ஆத்மசொருபஞானமே முக்கியமென நிரூபிக்கப்பட்டதென் றுணர்ந்து வர்ணாசிரமோசித கர்மங்களாய வைதிக யஞ்ஞாதிகளை யனுஷ்டித்து அதனல் சித்த சுத்திபெற்றுச் சர்வசங்க பரித்தியாகமாகிய அத்தியாச்சிரம [சந்நியாஸம்] த்தையடைந்து சற்குருநாதனருளால் சிரவண மனனம் உபாஸனங்களைச் செய்து, முறையே மூன்று பாவனைகளில் ஒன்றை முன்னதிகாரம்போற்கொண்டொழுகி, முறைப்படி மூன்றும் பாவனையாகிய ஸகுணஸங்கிரகோபாசனையை அடைந்து, அதன் பயனாகிய பதமுக்தியையும் நிர்க்குணயோகத்தையும் பெற்று, ஆத்மபரோக்ஷ சாக்ஷாத்காரமெனப்படும் திவ்ய விதேக கைவல்யத்தைப் பெறத்தக்க நல்வினைப்பயன்பெறாது, அந்தோ! வைதிக வர்ணாச்சிரமத் துவேஷியாய், வேதவாதஹீனராய்த்

திரமாத்திர தற்பரராய், வைதிகதீக்ஷா தூஷகராய், தாந்திரிகதீக்ஷாபூஷணராய், சிவ சிவ! ஆத்ம ஸதஸத்துவவாதபீஷணமான சேதனாத்மப் பிரமா திருசூன்யவாதியாய் வர்ணுவர சிஷ்யராய், ஆரியபரிசய தூரராய், ஆசாரியத்துவலோலராய், அலைந்திட நேர்ந்தமைக்கு எவர்தான் பரிதபியார்? எந்த வுபநிடதங்களிலும் சில விஷ்ணுமுகமான முதலிய விசேஷங்களும் ஆதித்தனுதி உபாஸனுஸ்தானங்களும் பேசப்படினும், ஆன்மாவை அசத்தென்ருவது சதசத்தென்ருவது ஸத்விலக்ஷணனென்ருவது ஸதஸத் விலக்ஷணனென்ருவது அசித்தென்ருவது சித்விலக்ஷணனென்ருவது சிதசித்விலக்ஷணனென்ருவது பேசப்படவில்லை. மற்று முன்னுதகரித்த கூர்மபுராண வசனப்பிரமாணப்படி வேதபாஹியர்களுக்கென சிவ விஷ்ணுக்களால் பிரவிருத்தி செய்விக்கப்பட்ட ஆகமங்களோ, ஜீவசிருஷ்டிவாதம் ஜீவநானுத்துவிதவாதம் அத்துவித தூஷணம் யாகதூஷணம் தீக்ஷைவிதி- ஆத்மசதசத்வாதம் ஆத்மசிதசித்வாதமாதி பலவாதம் பேசுகின்றன. ஸ்ரீமத் தசோபநிஷத் பஞ்சருத்திரமாதி உபநிடதங்களோ, வைதிகத்தையே புகழ்ந்து 'ஸர்வம் ப்ரம்மம்' என்ற ஏகான்மவாதம் நாட்டுகின்றன. ஆகமங்களும் நிரீசுவர சாங்கியமும் ஜீவநானுத்துவம் வாதிக்கின்றன. வேதங்களும் வேதாந்தங்களும் ஆன்மா சத்தே என்கின்றன- காமிகாதி அவைதிக சிவாகமங்களும் ஆருகதமும் அந்தோ! ஆன்மா சதசத்தென்றும் சிதசித்தென்றும் மற்றும் பலவும் பேசுகின்றன- இம்மட்டோடு நில்லாது இவ்வாகமங்களின் மொழிபெயர்ப்புச்செய்த சில வித்துவான்கள் தம்புத்தி போனவாறு எழுதிவைத்ததும் எழுதிவருவதுங் கூடச் சித்தாந்த சாஸ்திரமாய்க் கொண்டே வருகின்றன. முன்னர் ஆகமங்கள் மாத்திரம்- அப்புறம் வேதங்களையும், சேர்ந்தவரைச் சேர்த்துக்கொண்டு, அப்புறம் பதினன்கு திராவிடசாஸ்திரங்கள்- பிறகு பண்டார சாஸ்திரம் பதினன்கு- அப்புறம் திருவாவடுதுறைப்பண்டார சாஸ்திரம், திருவண்ணுமலைப் பண்டாரசாஸ்திரம்- பிறகு தம்பிரான்கள் சாஸ்திரங்கள்- இப்பொழு திவர்களுக்கெல்லாம் கடையில் நமது ஈழத்தையர் சாஸ்திரமும் அஸ்திரமுமெனச் சித்தாந்தம் இளைவிட்டுக்கொண்டே ஓடுகிறது- இவ்வளவு விபரீதவாதங்களுக்குக் கூர்மபுராணம் தாந்திரிகருக்குச் சொல்லிய நரகங்கள் போதுமோவெனப் பெருஞ் சம்சயம் நேர்ந்திடப் புதியதாக இன்று உபநிடத தூர்விபாகம் சிலவுபநிடதங்களை அப்பிரமாணமெனல் வேதவேதாந்தாவைதிக சாஸ்திர ஸபிண்டீகரணம் முதலிய புதியபாவம் அதிகமாகப் பெற்ற இக்கர்லத்து நவீனமாயாவாத சைவாகமிகட்கு எந் நரகமீசனளிப்பனே அறிந்திலேம். இஃது இப்படிக்கிடக்க, எவ்விதப் பிரமாணமுமின்றி இந்தவுபநிடதம் உண்மை பேசியது; இது பொய்பேசியது; இது உத்தமம்; இது மத்திமமென்னு மிவ்வாறு பேசுதல் இவருக்கும் இவரினத்தாருக்கும் ஸகஜமாயிருப்பதால் அதை மறுப்பது பயனற்றதென விட்டோம்- இதனுல் இவர் சிலவரிகளை வீணுக்கிலவிடம் தீக்ஷிதசுவாமிகளைத் தம்மினம் சேர்த்துப்பேசினது வழுவென்றும், அவர் சித்தாந்தம் இவ்வவைதிக சித்தாந்தத்துக்குத் தலைக்குப் பாக்குப்பிடிப்பதென்றும் காட்டி நாட்டினேமாகையால், அவர் வீணில் வேதாந்ததூஷணம் செய்தது பாபவேதுவென நாட்டப்பட்டது- மேல் இவர் தன் வாக்கியங்களையே முன்பின் விரோதமாக எழுதும் நேர்மையை விரிப்பாம்- இதுவரை சுத்தாத்துவிதமென்ற பெயரைத் தம்மதத்துக்கிட்டு வழங்கிவந்தவிவர் மெள்ளமெள்ள ஸ்ரீகண்டபாஷ்ய சுவீகாரத்தின்பின்னர் பரமாத்துவிதமென்றும் வெளியிலும் உள்ளே [விசிஷ்டாத்துவித] மென்றும் எழுதத் தவக்கினர்- இனி பவதேவீயம் ஸோமனுதீயங்களை ஸ்வீகரிக்க நேர்ந்தால் எவ்விதம் பெயர் மாற்றுவாரோ அறியோம்- அதுமட்டோ! வேதவேதாந்தங்களில் அனேக வாக்கியங்கள் ஒன்றேயுள்ளது- வேறில்லையென ஸர்வோபாசனைகளிலும் கூறிநிற்கவும், அதையே கூர்மம் லிங்கம் சைவம் பாத்மாதிபுராணங்கள் ஸ்பஷ்டமாய் உபபிருங்கணஞ்செய்திட, அந்த திவ்யார்த்தத்தையே பார்த்தம் சிவரகசியம் முதலிய மகேதிகாசங்கள் வற்புறுத்துவனவாக எங்குமில்லையென' இவர் அதைச்சொல்வது சூரியன் பிரகாசித்தாலும் அவனில்லையென வாதிக்கும் ஆந்தைச் சித்தாந்தமாம். நிற்க, இவர்கொண்ட சில நானுத்துவம், ஆத்ம சதசத்துவம், ப்ரம்மகேவல நிமித்தத்துவம், மாயாகாரணவாதம் முதலியதை எந்த வுபநிடதத்தில் இவர் கனவுகண்டாரோ அறியோம். இவர் பரமாசாரியராகக் கொண்டொழுகும் மேற்றிசையார் மொழிபெயர்ப்பிலாவதுண்டோ ஏதோ தெரியவில்லை. மேலும்—

ஸர்வாணி புராணானி வேதாஶ்சைகார்த்த
ஸம்ஶ்ரயா:॥

'புராணங்களெல்லாம் ஒரு பொருளையே உணர்த்துவன, வேதங்கள் ஒரே பொருளையே உணர்த்துவன' என்று புராணங்கள் சொன்னவுண்மையை ஸ்ரீமத் தீக்ஷிதராதியோரெடுத்து நிரூபித்திருக்கும் வழி யறியாது, அந்நெறியானே உபநிடதங்களும் பொதுவுறச் சகுணோபாசனையுபநிடதமும் நிற்குணோபாசனை யுபநிடதமும் வைதிக பாசுபதோபநிடதமுமென மூத்திறப்பட்டுப் பொருளினாலும் முத்திநிலைமை முதலியவற்ருலும் தம்முட்பெரிதும் பேதமுடையனவாமென்றுங் குழறிக்கழறினர்- சிவ சிவ! இவைதான் கலிசித்தாந்த வைபவம்போலும்! ஸ்ரீஜகத்குருநாதன் சர்வபுராண சம்மதமாக எழுதியிருக்க அதையெல்லாம் சுவயகற்பிதமென நிந்திக்கப் புகுந்த நிபுண சிகாமணியானவிவர், தமது வாக்கியம் அவர் வாக்கியத்திலும் மேலாக வேறு பிரமாணமின்றியே அறிஞரவையில் நிலைபெறுமென நம்பி எழுதியது மிகவும் இவர் பெருமையையும் சித்தாந்த விற்பத்தியையும் காட்டுமென்பதற்கையமில்லை.

அத்துவிதமென்ற சொல்லே வேதத்தில் உபநிடதப்பகுதிகளில் கேட்கப்படுகின்றதேயன்றி இவர் சொல்லும் பரமாத்துவிதம் அல்லது ஒளித்து வைத்துப் பேசிவரும் விசிஷ்டாத்துவிதம் இச்சொற்கள் எங்கும் இல்லையே- ஒருசமயம் இவர் கண்ட சொற்கள் மத்துவபாஷ்யக்காரர் கண்டெடுத்ததுண்டென்று ஏட்டில் அகப்பட்ட வேதாந்தரகசியவசனங்களைப் போன்றனவாய் வேதாந்திகள் ஒளித்த வசனங்களை இவருக்குச் சொப்பனத்திற் சிவகிருபையாற்கிடைத்தனவாயிருக்கலாம். இதுமட்டோடு நிற்கவில்லை. இவ்வுண்மையைச் சென்னை ஆரியனுர் அறியாததும் குற்றமாம்- ஆனுல் இக்குற்றம் எவரையும் விடாது. இந்தவுபநிடததுர்விபாக நவீனவவைதிக சித்தாந்தத் தெளிவை இவர் கைக்கொண்ட- புராணங்களறியா- அவைதிகாகமங்களும் வைதிகாகமங்களும் அறியா- தருமசாஸ்திராதி மற்றைய வித்தியாஸ்தானங்களறியா- இவர் சுவீகாரபாஷ்யக்காரர் ஸ்ரீகண்டரறியார்- அவராலே புகழப்பெற்ற சூத்திரமியற்றிய ஸ்ரீவேதவ்யாஸர் ஸ்ரீஜைமினி முதலிய மகரிஷிகளுமறியார். பவதேவபண்டிதர் ஸோமனுத பண்டிதராதி சைவபாஷ்யக்காரர்களும் ராமாநுஜர், மாத்துவர், வல்லபர், சைதன்யர் நிம்பாரகராதி முதலிய வைணவபாஷ்யக்காரர்களும் பாஸ்கரபட்டர் யாதவப்பிரகாசராதி இதர பாஷ்யக்காரரும் அறியார். ஸ்ரீஹரதத்த ஸ்வாமிகள் ஸ்ரீமத் தீக்ஷிதரவர்கள் இவ் விருவர்கள்கூட அறியார்- சிறிதுகாலம் வரை இவருமறியார். இவர் குருவாகக் கொண்டொழுகும் திராவிட சாஸ்திரக்காரரும் அறியார்- தம்பிரான்கள் பண்டாரங்கள் எவரும் அறியார்- ஆகவே இனியும் பிரமாணம் சிறிதுமில்லாத இப்பகுபாட்டை வேறு பண்டிதரெவரும் அறியப்போவதில்லை. இதனறிவு குற்றமேயன்றி இதனறிவின்மை குற்றமேயாகாது- குற்றமில்லாததைக் குற்றமெனவும் குற்றத்தைக் குணமெனவும் கொள்ளும் நவீன சித்தாந்தியாருக்கு இது மிகவும் உசிதமேயாகையால் இக்குற்றத்தை ஆரியனுர் துவாரா எல்லா வேதாந்திகளிடத்தும் ஏற்றவுத்தேசித்த விவர் உத்தேசம் மற்றவரைச் சங்கரிக்கப்பஸ்மாசுரன் பெற்ற வரம்போன்ற தன் தலையிலும் தம்மினத்தார் தலையிலுமே வெடித்தது. மேலே சென்னை ஆரியனுரைத் திட்டிச் சந்தோஷமடையும் வழக்கம்போல வடையும் மாதிரியையநுவதித்து அதில் ஸாரமாய்க் கண்டிக்கவேண்டிய முதலிரண்டாம் வரிகளைக்கண்டிப்பாம். அவர் தாம் கொண்ட சித்தாந்தத் தெளிவு முன்னரே ஏதோ திருவாழ்த்தான் சித்திரம்போல வேதாகமாதிகளில் இருப்பதாகக் கனவுகண்டு மகிழ்ந்து இக்கனவு காணுதாரை மூக்கரையன் கதைபற்றித் திட்டுகின்ருர். அது வருமாறு:—

இராமனெனப் பெயர்பெற்ற ஒருவன் சாத்தன் என்பவனைக் கொலைசெய்துவிட, அரசினர் ஆஞ்ஞை விதித்தபடி காவலர் சாத்தனைக்கொல்லாத இராமன் எனப்பெயர்பெற்ற மற்றொருவனைச் சாக்ஷிவிசாரணையொன்றுமின்றி பேரொப்புமாத்திரையினுற் பிடித்துத் தூக்கிக்கொன்றமைபோலவே ஏகான்மவாதோபநிடதங்களிலே பொய்யாகக்கொண்டொழிக்கப்படும் ஜீவேசுவரராகிய பதிபசுக்களென்று வைதிகபாசுபதோபநிடதங்களிலும் சிவாகமங்களிலும் திராவிடவேத சித்தாந்த சாஸ்திரங்களிலும் பொய்யாகக்கொண்டொழிக்கப்படாத பதிபசுக்களாம். ஜீவேசுவரரை, ஆராய்ச்சி சிறிதுமின்றி பெயரொப்புமாத்திரையாகக்கொண்டு அறியாமைமேலீட்டினுல் பொய்யென்றொழிக்கவேண்டிச் சென்னை யாரியனுர் வேதாகப்பிரதிபாதித்ததில் தைல புஷ்ப கந்த கண்டாகாத இந்த நாக்னிபலரச உவமைகளையெல்லாம் [குருடன் ஒருவன் தன் பிள்ளை பால்குடித் திறந்ததெனக் கேட்டு பால் எப்படியிருக்குமென்று அவன் வினவ, அது கொக்குப்போலிருக்குமென்று சொல்லக்கேட்டுப் பின்னர் கொக்கு எப்படியிருக்குமென்று அவன் வினவ, கை வளைவுபோலிருக்குமென்று சொல்லவறிந்து பின், அவன் தன் கையைக் கோணலாக வளைத்துத் தடவி ஐயோ! இந்த முறட்டுப்பால் குழந்தை வாயில் நுழைந்தால் சாவாது பிழைக்குமா வென்று சொல்லி அலறி வழுதாற்போல] விபரீதப்படுத்திப்பொருள்கொண்டு எவர்களாலும் நிந்திக்கப்படுதற்கு இலக்கியமாய் நிற்றலோடமையாது, சிவபரம்பொருளைப் பொய்யென்று தமது போலிப் புத்தகவாயிலாகத் தூஷித்து அதிபாதகராய் எரிவாய் நிரயத்துக்காளாய்விடுதல் முழுமையும் சால்பன்றுமென்க. இவ்வாக்கியங்களைச் சற்று உற்றுநோக்கினுர்க்கு இவர்கொண்ட ஆரியத்துவேஷம் இவ்வளவென்ப்புலப்படாதொழியாது. பாருங்கள்! அடியில் பீடிகை போடும்பொழுதே ஒவ்வாக் கதையொன்று எழுதினுர். அவருக்கும் அவரினத்தாருக்கும் பொருத்தமுள்ள திருஷ்டாந்தம் அகப்படுவது கடினமாதலால் அஃதங்ஙனமாகுக. 'வைதிகபாசுபதோபநிடதங்களிலும் சிவாகமங்களிலும்' என்றனரே. இதன் கருத்தென்ன? இவர் ஏகான்மவாதவுபநிடதங்களென வேறுபடுத்திய உபநிடதங்கள் அவைதிகபாசுபதங்களெனக் குறித்தற்காகவா? இவர்பாசுபதோபநிடதங்களுக்கு வைதிகவடை சேர்த்து, அல்லது காமிகாதிசிவாகமங்களவைதிகங்களாகவே, அவற்றை வேறுபடுத்தவா? முதல்வழிகொண்டால் வேதங்களில் அவைதிகம் உண்டெனப்படுமாகவே அச்சொற்பொருத்தமும் பொருட்பொருத்தமும் இவர்தான் சொல்லவேண்டும். பின்வழியானுல் இவர் சுவயசித்தாந்த விரோதமாம். ஆகவே வ்யர்த்தவிசேஷணமே இதுவென்ருயிற்று. மேலும் பாசுபதச்சொல்மட்டில் சேர்த்திட்டால் அது போதாதென்பது இவர் கருத்துப்போலும். வைதிகவடைசேர்த்தாற்ருன் பாசுபதம் நிலைபெறும்போலும். நிற்க; சிவாகமங்களிலுமென்ருர். சிவாகமங்களெல்லாம் சிவப்ரமபேதவாதமேயாகையால் சிவ வடையை ஆகமங்களிற்சேர்த்தும் நிஷ்பலமே திராவிடவேதமென்ருர். ஒவ்வொருபாஷைகளிலும் இந்தக்காலத்தில் வேதங்கள் உண்டாகையால் அவற்றில் குறித்துக் காட்டவேண்டித் திராவிடவடைசேர்த்தார்போலும். மேலும் இந்தத் திராவிடவேதசப்தம் இவ

ராலும் இவரினத்தாராலும் தேவாராதிகளிடத்தும் வைண
வரால் திராவிடோபநிஷத் சப்தமுள்பட திருமொழி திருவா
ய்மொழிகளாதிகளிலும் விநியோகிக்கப்பட்டு வியபிசரித்த
லால் அங்கும் திராவிட சைவவேதமென்று ஒரு சைவ
வடைமறந்தார். அம்மட்டோ! வேதவேதாந்த விசாரப்
போர்க்களத்தில் திராவிடவேத கன்னட வேத
ஹிந்துஸ்தான்வேத துருக்கவேத ஹிப்ருவேத பார்சீவேத
ங்கள் வேதங்களுக்குப் பின்படைகளானல் ஸ்ரீராமனுக்குக்
குரங்குகள் ஸகாயஞ்செய்தாற்போற் சிலவிடத்தும் கர்ண
னுக்குச் சல்யன் சாரத்யம் செய்தாற்போல் பலவிடத்தும்
முடியும். இதுவும் நிற்க; இவர்கொண்டபடி சைவவைஷ்
ணவ திராவிட வேதங்கள் மாளவநாட்டில் சோழிகள்ஆப
ரணமாவதுபோலத் தென்னாட்டில் சில கீழ்வருணத்தவரிடம்
வழங்கப்படும் பிரமாணமாயினும் அது ஸர்வ வித்வத்சபா
விவாத சூர சிகாமணியாய வேதாந்தி, வீரனுடன் விவாத
த்துக்கு முன்வரும்பொழுது கையேந்தத் தக்கப் பிரமாணா
ஸ்திரமாமோ. இதை எடுத்துவந்ததும் உத்திரராஜகுமாரன்
யுத்தத்திற்குப் போன கதைபோலாகாதோ? கொட்டத்தட்
டையைக்கொண்டு கோடிமுடிகளைப் பெயர்க்கவிவர் முன்
வருவார்போலும். இங்கு இவரெடுத்த பிரமாணங்கள் வே
தங்கள் ஆகமங்கள் தேவராதிகள் சித்தாந்த சாஸ்திரங்
கள் ஆகிய இவற்றுள் ஏதோ நவீனகாலத்துப் பிறந்த சில
கவிசித்தாந்திகளால் எழுதப்பட்ட சித்தாந்தங்களென விவ
ராலும் இவ ரினத்தவராலும் பெயரிட் டழைக்கப்படும்.
வரப்பெற்ற சில புஸ்தகங்களும் அறிஞர் அவையின்கண்
பணம்பெறும் பிரமாணமாமென வெடுத்தாண்ட விவர்பே
றறிவின்பெருமைக்கு ஸர்வவேத வேதாந்த சம்மதமும் ஸர்
வபுராண மகேதிகாசாப்த வாக்கியாதிப் பிரமாண சம்பிரதி
பன்னமும் அனேக புராணேதிகாச சூசிதமாகாத்மிய மகா
வதார மகாபுருஷ ஸம்ஸ்தாபிதமுமான அத்வைத சித்தா
ந்தத்தைக் கைக்கொண்ட அறிஞர் அவயேறிய ஆரியனார்
அறிவு எவ்வளவும் மேலானததேயென்பதில் தடையுன்
ணே? நிர்வாணராஜ்யத்தில் கோவணம் கட்டியவன் பைத்
தியக்காரனன்றோ. நிற்க; இவர் ஸ்வீகாரபாஷ்யக்கார ரல்
லது இவரால் ஏற்கப்பட்ட பெரியோராகிய ஸ்ரீமதப்பயதீ
க்ஷிதமூர்த்திகள் அல்லது ஸ்ரீசைவஸ்தாபன துரந்தர ஸ்ரீசு
தர்சனசூரி சக்ரவர்த்தி மற்றெந்த பரமாசாரியர் அல்லது
இவர் தற்காலம் தமக்காசாரியராகவெடுத்த விஷயத்துக்கெ
ல்லாம் திருஷ்டாந்தப் பெருநிதியாகப்பிரமாணப்பேரம்பலமா
ய்க்கொண்டாடும் மேற்றிசைப் புலவர் எவராயினும் இவர்
சொல்லிய பிரமாண சாஸ்திரங்களாகிய திராவிடவேத சை
வசித்தாந்த சாஸ்திரங்களைப் பிரமாணமென எடுத்து வழங்
கினரோ? மேலும் வேதங்களைத் தழீஈவெளிவந்தன. தே
வராதிகள் அவைகளை ஒருவாறு வைதிகநூல்க ளெனலாமே
யன்றி வேதங்களெனல் பொருந்தாது. ஒருசமயம் அத
னுப்பிருங்கணங்களான புராணவிதிகாசங்களை ஐந்தாம்வேத
மென்றாற்போல இவைகளை ஆறும்வேதமாக்கி உபசாரமாக
வழங்கினேமெனில் சாந்தோக்கிய பிருகதாரண்யகம் முதலி
யவுபநிடதங்களிலேயே புராணேதிசாசங்களை ஐந்தாம்வே
தமெனப் பன்முறை வழங்கின வேதவழக்கின் மிகுதிபற்றி
ஆரியர் அவற்றை வேதமெனவுபசரித்தார். இத் தேவாரா
திகளோ! அங்ஙனமில. கடற்கடந்து கர்மலோபம் பெற்ற
ஒருவன் ரிஜிஸ்டராபீசிலும் தம்போலியரிடத்தும் பிராம
ணன்தாமென வழங்கப்பெறினும் சிரௌதஸ்மார்த்த கர்மா
னுஷ்டர்களான பிராமணர் கோஷ்டியில் அவர் பிராமணர்
தாமென ஸம்வியவகாரத்தில் சேர்க்கப்படாதவரை ப்ராம்ம
ணரெனக் கூசாது வைதிககோஷ்டிப் பிரவேசம் முடியுமோ?
முடியாதன்றோ. அங்ஙனமே வேதங்களுட்சிறந்த வேதா
ந்தபாகத்திலும்—

ப்ருஹதாரண்யகம்ஶிர:|

பிருகதாரண்யகம் தலையாமெனக் குறிக்கப்பட்ட சிறந்த
வேதாந்தத்திலேயே வேதங்களென வுபசரிக்கப்பட்ட ஆர்
ஷசாஸ்திரங்களான இதிகாசங்களுக்கும் அனுதிகளான ஈச
வாக்கியமான புராணங்களுக்கும் நிகராய் இத்திராவிடப்
பாவினங்களை வேதமெனலாமோ? வைதிகநூலென்பதற்கும்
வேதமேயென்பதற்கும எவ்வளவோ வித்தியாஸமுண்டு.ஸ்மி
ருதிகள் வைதிகங்களேயன்றி வேதங்களாகா. அப்படி
யாக அவைகளை வேதங்களாமெனப் பிரமாணகோஷ்டியில்
விடுத்ததும் அவித்தியாஸ்தானங்களாகிய ஆகமங்களை அப்
பிரமாணகோஷ்டியில் சேர்த்தொதுக்காது பிரமாணகோஷ்
டியில் புகுத்ததும் அம்மட்டோடிருந்திடாது வேதமல்லா
ததூஉம், வேதமென வெங்கும் உபசரிக்கவும் கூடப்பெறா
ததூஉமாகிய தேவாராதி திவ்யசூக்திகளை வைதிகமென்ற
தற்குமாறாக வேதமென்றதூஉம். மூலவிருத்தம் முற்குறி
த்த முப்பிரமாண விருத்தமுமான நவீன கற்பனைகளை அந்
தோ! பிரமாணகோஷ்டியில் சேர்த்து வழங்கியதூஉம்,
விவாதத்தில் உபயஸம்பிரதிபன்னப் பிரமாணமே எடுத்து
க்காட்டவேண்டுமென்ற வித்வத் விவாத சம்பிரதாய ஞா
னசூன்யதையை இவர் தலையிலேற்றி இவரை அறிஞரெ
ல்லோரும் தூஷிக்கச் செய்யாதொழியாது. இவ்வுண்மை
அறியாது ஏதோ பழைய சித்தாந்தமாகிய ஆர்ஷசித்தாந்த
த்தைக் கைப்பற்றிய ஆரியனரெல்லோராலும் நிந்திக்கப்ப
ட்டதாக மனப்பாற்குடிப்பதும் அவரை நிந்திப்பவரே அறி
ஞரென்று மதிப்பதும் கர்மவிபாக கர்த்தாவின் கருத்தி
லடங்காதபடி அமைந்த மகாபித்தரோக வைபவமோ ஏதோ
தெரியவில்லை. இந்த ரோகம் சாங்கிராமிகம்தான்போலும்.
ஆதலாற்றான் இச்சமயம் பம்பாய் முதலிய விடங்களிற்றோ
ன்றித் தேசசஞ்சாரஞ் செய்துவரும் மகாமாரியைப்போல
வே இப்புதிய சைவ சித்தாந்த மகாரோகமும் எங்கும்பர
வுவதாகின்றது- நிலைக. இவர், வேதாந்திகள் சித்தாந்தத்
தையாவது கெட்டுப் பிறகு தூஷிக்க வெளிவந்தாரோவெ
னின் அப்படியுமில்லை. பாருங்கள்! வேதாந்தங்களில்
ஸச்சிதானந்த கனமானப் பிரமத்திடம் கற்பிக்கப்பட்ட ஜட
ஜீவேசுவரர்களைப் பொய்யென்றோ, அல்லது அநிர்வசனீய

வைபவமென்றே ஓதுக்கியதேயன்றி இவர்கொண்ட வவைதிகப்பிரமாணங்களில் உண்மையெனக்கொண்ட சிவசீவர்களைப் பொய்யென்றுவது அநிர்வசனீயமென்றுவது ஓதுக்கவில்லை. ஆகமிகள் சிவனையே ப்ரம்மமென்றனர். ஆனால் அவன் நிற்குணனென்றுவது அஷ்டகுணனென்று சற்றேறக்குறைய அணுகாரணவாதிகளாய் வேதவேதாந்தாதிகளில் ஓதுக்கப்பட்ட தார்க்கிகர்கொண்டவாறே கொண்டு கேவல நிமித்தமென்றும் வாதித்தனராவார். பிரம்மமே சத்தியமெனச் சொல்லிய வேதாந்தசாஸ்திரம் பெயரொப்பு மாத்திரையில் அசத்தியப்படுத்தவில்லை- மற்று சிவனென்பதையே உண்மைப்பொருளென்றும் அதுவே நிற்குணமென்றும் உபநிடதங்கள் நிரூபிப்பன- இதனால் வேதங்களும் ஆகமாதிகளும் அதிகாரவிசேடத்தில் உபயோகப்படும் ஸோபான முறைகளாதலால் இவை விபரீதார்த்தமாகா-அறிஞர்காள்! ஜீவேசுவரரைப் பொய்யென்றதால் பாபியும் நரகப்பிராப்தியுள்ளவருமாம் ஆரியனுர். அவர்கெதியானவிவர் ஆத்மசதசத்வாதியாய் ஆத்மசூன்யவாதியாய் நிற்பதால்எந்த கதி அடைவாரோ, அவர்தான் அறிவார்- ஆனால் ஜீவன் சூன்யனானதால் எப்படி அவன் நரகம்பெறுவான்? பெறமாட்டானுகவே வேண்டியவாறெழுதலாமென்று கருதினுர் போலும். மேலும் ஏதோ சில வுபநிடதங்களில் இவ்வித சித்தாந்தம் இல்லையென்றுர். அதைச் சிறிது விசாரிப்பதற்குமுன்னர் வீண் கதைகளால் இவர் ஏட்டை நிரப்பிய விஷயங்களை யொழித்துப்பிறகு, முடிவுரை கூறுமிடம் வேதாந்தமே ஸர்வவேதாந்தசித்தாந்த சம்மதமெனக்காட்டுவோம். இவ்விஷயத்தில் ஆத்மவியாப்தியை நிரூபிக்கும் சில வசனங்களை ஏதோ காட்டுவாரா? இதனால் அத்வைத சித்தாந்தம் தவறுற்றதெனக் காட்டுகிறுர். அதை விசாரிப்பாம்.

சுவேதாசுவதரவுபநிடதத்தில்,

திலேஷு தைலம் ததிநீவ ஸர்பி:
ஆப: ஸ்ரோதஸ்ஸ்வரணீஷு சாக்நி:
ஏவமாத்மாத்மநி க்ருஹ்யதே ஸௌ
ஸத்யேநைநம் தபஸா யோநுபஸ்யதி॥

என்ற வசனத்தை விசாரிக்கத்துவக்கி ப்ரம்மோபநிடதம் தியானபிந்து முதலிய சில உபநிடதங்களை விசாரித்து அடுத்த பேபரிலும் முடிவுரை காட்டுகிறுர். அவர் அந்த மந்திரப்பொருள் கூறியதிது- யந்திரத்தாட்டுதலால் எவ்வாறு எள்ளினின்று நெய் பெறப்படுகின்றதோ- மத்திப்பதால் தயிரினின்று நெய் எவ்வாறு பெறப்படுகின்றதோ தோண்டுதலால் [வறந்த] நதியில் ஜலம் எவ்வாறு பெறப்படுகின்றதோ. கடைதலால் கட்டையின்று நெருப்பு எவ்வாறு பெறப்படுகின்றதோ அவ்வாறே இவ்வான்மா (பரமான்மா] அறிவிலே கிரகிக்கப்படுகிறுன்- எவன் கிரகிக்கின்றுனே அவன் தபஸினாலும் ஸத்தியத்தினாலுமே இந்தப்பரமான்மாவைப் பார்க்கின்றுனென்பது- மேலே.

ஸர்வவ்யாபிநமாத்மாநம் க்ஷீரே ஸர்பிரிவார்பிதம்॥

என்றதற்கு அப்பரமான்மா [ப்ரம்மம்] பாலிலே நெய்வியாபித்தவாறுபோல ஆண்டும் நீக்கமின்றி வியாபிக்கின்றது என்றுமே பொருளுரைத்தார்- இதற்குப் பலமாக-

திலேஷு தைலம் ததிநீவ ஸர்பி:
ஆப: ஸ்ரோதஸ்ஸ்வரணீஷு சாக்நி:
ஏவமாத்மாத்மநிஜாயதே ஸௌ ஸத்யேந தபஸா
யோநுபஸ்யதி॥

என்ற ப்ரம்மோபநிஷத் வசனத்தையும்-

திலாநாஞ்ச யதா தைலம் புஷ்பே கந்த இவாஸ்ரித: । புருஷஸ்ய ஸரீரேது ஸபாஹ்யாப்யந்தரே ஸ்தித:॥

என்ற த்யானபிந்துபநிடத வசனத்தையும்

திலேஷு யதா தைலம் புஷ்பே கந்த இவாஸ்ரித: ।
புருஷஸ்ய ஸரீரேஹி ஸபாஹ்யாப்யந்தரஸ்தித:

என்ற பிரும்மவித்யோபநிஷத் வசனத்தையும் காட்டி அதற்குப பிருங்கணமாகச் சிவபுராண ஸ்காந்தபுராணவாக்கியங்களைக்காட்டி மேலே ஏதோ சில தம்பிரான் பாவினங்களையும் சில சுந்திரவசனங்களையும் சில தேவாரச் சொற்களையும் முன்னூறவண்டிச்சுவடிக்காரரென இவர் நம்பிய அருணந்தியார் வார்த்தையையும் காட்டி ஒரு முடிவுரை கூறி மேலே கிரந்தவுபசங்காரத்தில் மகா பாசுபதாஸ்திரத்தினிறுதியில் ஆரியனுதிவேதாந்திகளை நிந்தித்தலையே காப்பாக்கி வருகின்றுன். இவர் இங்கெடுத்த உபநிடதங்கள் இவர் சொன்ன சித்தாந்தத்தையே கொண்டிங்ஙனம் உரைத்தனவா? இவர் கூறியபொருளும் இம்மந்திரங்களுக்குண்மையானவைதானே? இவை அத்வைதசித்தாந்த விரோதிகளோ? என்பதையும் விசாரிப்பாம். இங்கு இவரெடுத்த சுவேதாசுவதரவுபநிடதம் முன்னரே விசாரிக்கப்பட்டது- இம்மந்திரவிஷயமட்டில் இங்கு விசாரிக்கவேண்டியதாகவே இம்மந்திரத்திற்குச் சாகாந்தரோபசங்காரத்துக்காக இவரெடுத்த ப்ரம்மத்தியானபிந்து ப்ரம்மவித்தைகளை விசாரித்து இவருக்கு அவை முற்றும் விரோதமெனக்காட்டி மேலே பிரகிருதமந்திர வுண்மைப்பொருளைக் காட்டுவோம். இவர் அம்மந்திரத்தகை பரமாத்மபரமாக உதகரித்தார். ப்ரம்மவுபநிடதத்தில் இவர் பரமாத்மபரமென் றுதகரித்த வசனம் ஜீவபரம்- அம்மந்திரத்தை இவர் பரமான்மபரமெனமயங்கினுர்- அந்த உபநிடதவாரம்பத்தில் உபநிடதப்பிரதிபா

த்யராகிய புருடர் நான்கு ஸ்தானங்களில் உள்ளாரென்ன் ருரம்பித்து இறுதிவரை ஜீவஸ்வரூபத்தையே நிரூபிப்பது எப்படியெனில்—

யஸ்ய சதுஷ்பாதஸ்ய சத்வாரி ஸ்தாநாநி பவந்தி ।
நாபிர்ஹ்ருதயம் கண்டம் மூர்தா ச ॥

இனி இப்புருடனுக்கு நான்கு ஸ்தானங்கள் கொப்புள் இதயம் கண்டம் மூர்த்தாவுமாம் என்பதுபக்கிரமம் உபசங்காரத்திலும்-

நாபிம் ஜாகரிதம் வித்யாத் கண்டே ஸ்வப்நம் ஸமாவிசேத் । ஸுஷுப்தம் ஹ்ருதயஸ்தம் து துரீயம் மூர்த்நி ஸம்ஸ்திதம் ॥

நாபியை ஜாக்கிரஸ்தானமெனவும் கண்டத்தை ஸொப்னஸ்தானமெனவும் இதயத்தை ஸுஷுப்தி ஸ்தானமெனவும் மூர்த்தாவைத் துரீயஸ்தானமெனவும் அறியற்பாற்றென்ப துபசங்காரம்- ஆகவே இவ்வுபநிடத ப்ரதிபாத்யாத்ம சொரூபம் அவஸ்தா சதுஷ்டயவசமாய ஜீவசொரூபமேயாமென வுபக்கிரமோபசங்காரங்களால் ஏற்படுகின்றது. மேலே இந்தவிதமாய் அவஸ்தாத்திரயவிலக்ஷண துரீய சொரூபம் சிவனே என வறிந்தமையின் பயனை அடுத்தாற்போல் சொல்லிய மந்திரமும்—

யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மநஸா
ஸஹ । ஆநந்தமேதஜ்ஜீவஸ்ய யஜ்ஜ்ஞாத்வா முச்யதே புத: ॥

எவ்விடம் வாக்குக்கும் மனதுக்கும் ஒருங்கு சொல்லாதொழியுமோ அதுவே ஜீவசொரூபானந்தம். அதனியலறிந்தவித்துவானே மோக்ஷமடைவானென்றது. இதே மந்திரம் தைத்தரீயத்துமுள்ளது- ஆனல் 'ஜீவஸ்ய' என்பதற்குப் பதில் 'ப்ரம்மண:' என்றும், 'யக்ஞாத்வாமுச்சியதே புத:' என்றதற்குப்பதில் ந பிபேதி குதஶ்சந என்றும் அங்குபடிக்கப்பட்டது அதுவிக்ஞானமயகோசபூர்வலக்ஷணமாகவே ஜீவபபரமாக வேண்டுவேதே நியாயமென விவ்வுபநிடதம் ஜீவசப்தத்தால் அம்மந்திரத்தை விரித்துரைத்து ஜீவப்ரம்மாபேத சற்சித்தாநந்தத்தை நாட்டியதுமன்றி இவர் எடுத்த சுவேதாசுவதர மந்திரத்தையும் இதனடுத்த மந்திரமாகப்படித்து ஜீவபரமாகவே முடித்து அடுத்த மந்திரம்

ஸர்வவ்யாபிநமாத்மாநம் க்ஷீரே ஸர்பிரிவார்பிதம் । ஆத்மவித்யாதபோமூலம் தத்ப்ரஹ்மோபநிஷத்பரம் ॥

எங்குநிறைந்த ஆன்மா க்ஷீரத்தில் நெய்போல ப்ரம்மவித்தியாத் தவங்களைக்கொண்டு அறிந்தால் அதுவே ப்ரம்மம் அதுஉத்தம உபநிடதம் என்றது. இதனல் ஏகனுய ஆன்மா ஸர்வவியாபகன் எனவும் அவனே அவஸ்தாத் திரயத்தும்அகப்பட்டும் துரீயனுகவும் உள்ளவன் எனவும் இவனதுசொரூபமே ஆநந்தமய பிரம்ம சொரூபமெனவும் அச்சொருபமே இப்ரபஞ்ச வுபாதானமும் நிமித்தமும் ஆதலால் நிமித்தவேஷத்தால் ஔபசிலேடிக வியாத்தியும் உபாதானவேஷத்தால் சொருபவியாத்தியும் ஆன்மாவுக் குசிதமாகவே இதனிடையே தோன்றிய மந்திரமாயதிலேசுதைலம் திலதைலததிசர்பிஸ்ஸரண்யக்னி திருஷ்டாந்தங்களால் மூவ்வகைப்பட்ட ஔபசிலேடிகத்தையும் ஸுரோதச் சுவாம் என்று சொருபவ்யாத்தியையும் கூறியது. இதனிடையே (வறந்தர)என்று சொல்லவருவித்து அதைப்புகுத்து நெருக்கி இவர் பொருள்கூறியிடர்படவேண்டிய வவசியம் சிறிதும் பெருது. அதனுற்ருன் மாண்டூக்கியமும் மூவ்வவத்தைகளில் உள்ளவன் வைசுவானரன் தைஜஸன் பிராஞ்ஞன் என்னும் ஜீவகோடியாக்கி சுத்தாத்துவித சிவசொரூபனே துரீயன் என்றது-

ப்ரபஞ்சோபஶமம் ஶாந்தம் ஶிவமத்வைதம் । சதுர்த்தம் மந்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய: ॥

உலகொழியப்பெற்ற சாந்தசிவனைத் துரீயனென்பர்அவனே யாத்மா பரமாத்மா அவனே யறியற்பாலவன் என்றும்

ஶாந்தஶ்ஶிவோऽத்வைத: சாந்தன் சிவன் அத்துவிதன் என்றும் நிரூபித்தது ஆகவே பிரம்ம வுபநிடதமும் ப்ரம்ம சொரூபமென்று இவர்கொண்ட வஸ்துவை திலதைலாதி திருஷ்டாந்தங்களால் வியாபகம் என நிரூபித்த தல்லவென்றுயிற்று. அதுகொண்டே த்ரிஷ்டைதயம் என்றமந்திரத்துக் கடுத்தமந்திரம்.

ஊர்ணநாபிர்யதா தந்தூந் ஸ்ருஜதே ஸம்ஹரத்யபி ।
ஜாக்ரத்ஸ்வப்நே ததா ஜீவோ கச்சத்யாகச்சதே புந: ॥

எங்ஙனம் சிலந்திப்பூச்சிநூல்களை உண்டாக்கி மீண்டும் உபசங்கரிக்கின்றதோ அப்படியே ஜாக்கிரத்தையும் ஸொப்னத்தையும் ஜீவனடைகிறுன் என்றது. அற்றேலது தன்முன்னர் உள்ள

ஆத்மாநமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம் ।
த்யாநநிர்மதநாப்யாஸாத் தேவம் பஶ்யேந்நிகூடவத் ॥

ஆன்மாவை யரணியாக்கிப்பிரணவத்தை உத்தராரணியாக்கித்தியானக்கடைதலே ஆவிருத்திசெய்தால் உள்ளேநிறைந்த தேவனைக்காண்பான் என்றதும் ஜீவபரமேயோவெனின் யாதுசெய்வோம்- ஜீவபரமாகத்தான் தோன்றுகின்றது- ஜீவபரமென்றுல் அசோதித ஜீவபரமல்ல- மற்று சோதித்த ஜீவ[ப்ரம்ம] பரமே- மற்று தாந்திரிகர் கொண்டபடியான அஷ்டகுண ப்ரம்மபரமல்ல- நிர்விசேஷ சைதன்யத்தையும் சிலவிடம் சபளத்தையும் தமூச அதிகாரவே

ற்றுமைக்கேற்றபடி நிரூபிப்பது- ஆதலாற்றான் இதற்கடுத்த கைவல்லியவுபநிடதம் மேற்கண்ட 'ஞாதா நசாணிம்' என்ற மந்திரத்தைப் படித்தடனே-

ஸவவஸாயாவஸிஜெ ஹி தாஜூா ஶரீரஜோஹூா' யகல்ரா திஸவ-ழ்||

அவனே மாயையால் மயங்கியவன்போல் சரீரமடைந்து செய்வான் எல்லாம் என்று' தொடங்கி,

தஃஸெவஃஸெவ தஃ||

அது நீதானே நீதானதுவேயென்று நிரூபித்தது. இவர் கண்ட நவீன சைவசித்தாந்தக் கலவிற்கண்ட வுபநிடதங்களில் ஏகாத்மவாதம் இல்லாமற்போனாலும் ஜாக்கிரவுலகில் வைதிகர் படிக்கும் உபநிடதங்களில் எங்கும் அது நிறைந்தேயிருக்கிறது. பாருங்கள்! இவர் எடுத்தாண்டப்ரம்மோபநிடதம் இவரை இப்படிக் கைவிட்டதே இவ்வளவேதானோ? த்யானபிந்துவும் கைவிடுவதைக் காட்டுவோம்—

வரும்.

அத்வைதவிளக்கம்.

தொடர்பு.

அல்லது ஞானிகளான யோகாப்பியாசஞ் செய்கிறவர்களுடைய குலத்திலே ஜனிக்கிறான். இந்த லோகத்தில் இப்படிப்பட்ட பிறவியானது எதுவோ, அது மிக துர்லபமானது (மிக அரிது.) (சஉ)

என்றும் உள்ள பிரமாணங்களின்படி ஞானயோகம் முற்றுப்பெறுவதற்கு முன்னர்த் தேகம் நழுவினோன் உருத்திரலோக முதலிய புண்ணியலோகங்களை யடைந்து ஆண்டுள்ள வின்பங்களை யனுபவித்துப் பின்னர்ப் புவியிற் சனித்து ஞானயோகத்தைக் குறைவறப்பெற்று முத்தியை யடைகிறானென்பது பெறப்பட்டது. இவற்றில் முதலாவது எண்ணின்படி சாதனசதுஷ்டயம் ஞானத்தையடைவதற்கு நேர்சாதனமென்றும், இரண்டாவது எண்ணின்படியும் மூன்றுவது எண்ணின்படியம் சாதன சதுஷ்டயத்திற்கும் சிரவண மனன நிதித்தியாசனங்கட்கும் புண்யலோகப் பிராப்தி யுண்டென்றும் பெறப்படுதலினால், பூர்வபட்சியார் சரியையாதிகளுக்குச் சாதன சதுஷ்டயம் சாதனமாயிருக்கிறதென்றும் அதாவது சாதனசதுஷ்டயம் சரியை யாதிகட்குக் கீழாயதென்றும், சாதன சதுஷ்டயங்களுக்குத் தனித் தனிப்பேறயாதென்றும், பிரமாணத்துடன் விடைகூறேன் றும் பேசியது அவர் மதசித்தாந்தத்திற்கும், வேதாந்த சித்தாந்தத்திற்கும், வித்தியா ஸ்தானங்களின் சித்தாந்தத்திற்கும் மாறுமென்பது நன்கு விளங்கிய தென்க.

சாதன சதுஷ்டயத்தில் முதற்சாதனமாகிய நித்தியாநித்திய வஸ்து விவேகத்தினால் இகலோகமுதல் சிவசாரூப்பியம் வரைக்கும் அநித்தியம் என்னும் புத்தியும் இரண்டாஞ் சாதனமாகிய இகபரபோக விராகத்தினால் அவைதுக்கவடிவாயிருத்தலின் அவைற்றின்கண் ஆசையின்மையும் உண்டாயிருத்தலின் இவ்விரண்டுசாதன முடையார்க்கே புண்ணியலோகப் பேறு உண்டாகுதல் பொருந்தாததாக, மற்றவிரண்டு சாதனங்களையும் அவையிற்றிற்கு மேற்பட்ட சிரவண மனன நிதித்தியாசனங்களையும் பெற்றவர்களுக்குப் புண்ணியலோகப் பிராப்தி யுண்டாமென்பது எங்ஙனமெனின் கூறுதும்:—

நிராலம்போபநிஷத்.

'பந்தம் யாது?'

என்னும் வினாவிற்கு விடை

'அநாதி அஞ்ஞான வாசனையினாலே 'நான் பிறந்தேன்' என்பது முதலிய எண்ணம் பந்தம்.'

'தகப்பன், தாய், சகோதரன், பெண்ஜாதி, பிள்ளை, வீடு, தோட்டம், பூமி முதலியவைகளிலே 'என்னுடையது' என்கிற சம்சாரமாகிய அஞ்ஞானவிஷயமான மனோவியாபாரம் பந்தம்.'

'கருத்திருத்துவாதி அகங்கார சங்கற்பம் பந்தம்'

'அணிமாதி அஷ்டைசுவரியம் சித்திக்கவேண்டுமென்கிற ஆசைபந்தம்'

'தேவமனுஷியாதிகளை உபாசிக்கவேண்டுமென்னும் இச்சையாகிற சங்கற்பமே பந்தம்.'

'யமம் முதலான அஷ்டாங்க யோகாப்பியாசம் செய்யவேண்டுமென்னுஞ் சங்கற்பமே பந்தம்.'

'வருணாசிரம தரும கரும சங்கற்பமே பந்தம்'

'ஆக்ஞை, பயம், சம்சயம் இவைகள் ஆத்மகுணமென்கிற சங்கற்பம் பந்தம்'

'யக்கியம், விரதம், தபசு, தானம் இவைகளுடைய விதியை யறிதல் (அவைகளை) நடத்தல் இந்த விஷயமான மனோவியாபாரம் பந்தம்.'

'மோட்ச மாத்திரம் வேண்டுமென்கிற சங்கற்பமேபந்தம்'

என்று கூறியதினால் மூன்றுஞ் சாதனமாகிய சமை; தமை, திதிக்ஷை, உபரதி, சிரத்தை, சமாதியென்னும் ஆறின் அடைவாகிய சமாதிசட்க சம்பத்தியும் நான்காஞ்சாதனமாகிய மோட்சவிச்சையென்னும் முமுட்சுத்துவமும், மோட்சத்தையடையச் சற்குரு முன்னிலையிற்

செய்யும் சிரவண மநந நித்தியாசனமும் பந்தமென்று விளங்கினமையின் இவற்றிற்கேதுவாயுள்ள சாதன சதுஷ்டயத்தின் முதலாவது சாதனமும் இரண்டாவது சாதனமும் பந்தமென்றேற்பட்டன. படவே, பந்தத்துக்குத்தக்க பயன் நேராயும் அவாந்தரமாயும் வருமென்க. சரியையாதிகளுக்குப் பலப்பிராப்தியுண்டாதல் நேராய் வருவதென்றும், சாதன சதுஷ்டயங்களுக்கும் சிரவணாதிகட்கும் பலப் பிராப்தியுண்டாதல் அவாந்தரமாய் வருவதென்றும் உணர்க.

இகலோகத்தையும் சுவர்க்காதிலோகத்தையும் துக்கவடிவினதென்றுரைத்தாலும் சிவசாரூப்பியத்தையும் துக்கவடிவினதென்றுரைக்கலாமோ வெனின் சந்தேகமின்றி உரைக்கலாம். எவ்வாறெனின் அது இவ்வாறென்க.

அது வருமாறு:-

'உணருரு அசத்து' என்னும் சிவஞானபோத சூத்திரப்படியும் 'தொன்மையுலகுயிரில்லைதோன்றுவதெல்லாம் அசத்து' என்னும் தேவிகாலோத்தரச் செய்யுட்படியும் சிவசாரூப்பியமும் திரிசியமாயிருத்தலினால் அசத்தாய் காண்பான்காக்ஷிகாணப்படுபொருள்என்னும் திரிபுடியோடு கூடியதாயிருத்தலின் துக்கவடிவினதாய் இருக்கிறதென்பதற்கு யாதும் ஆசங்கையின்று- மேலும்.

சூதசங்கிதை முத்திநிலையுரைத்த அத்தியாயத்தில்

'நாடுறுசதாசிவப்பேர்நாட்டுசோரூபமுத்தி
நீடுறுமெவற்றினுக்கும்நிரம்பியவிசேடமாகும்
பாடுறவுரைத்தவிந்தப்பதமுத்திமுறையிற்சார்வோர்
ஊடுறுபோகந்துய்ப்பாரொன்றற்கொன்றதிகமாக. ௨௬

என்றும்

புண்ணியந்தீர்ந்தபின்புபூமியின்விரைந்துமேன்மை
நண்ணியகுலத்துத்தோற்றநண்ணுவரதனாலென்றும்
கண்ணியபிறப்பிறப்புக்கழிதலின்று ௨௭

என்றும் கூறுதலினாலும், கூர்மபுராணம் அந்தகாசூரன் சாரூபம்பெற்ற அத்தியாயத்தில் அந்தகாசூரன் கயிலையிற் சென்று ஆண்டுள்ள சிவகணங்களோடு சண்டையிட்டிறுதியில் சாரூபம் பெற்றானென்றிருப்பதனாலும் அது துக்கவடிவினதென்பது திண்ணத்தினுந் திண்ணமாம். இன்னும் பூர்வபட்சியாரது நவீனமதத்தின் வண்ணம் சிவ சாரூபம் பெற்றவன் ஆண்டுநின்றே சிவசாயுச்சியத்தை யடையவிரும்புதல் அது துக்கவடிவினதாயிருத்தலைப் பற்றியன்றோ? இன்றேல் விரும்பமாட்டானென்பது தெளிவாம். பின்னும் சிவசாரூபம் பெற்றவன் புண்ணியக்கழிவை நினைக்கும்போது மனங்கலங்கித் துக்கப்படுவானென்பதும், ஏனையரும் துக்கப்படுவார்களென்பதும் மேற்காட்டியுள்ள சூதசங்கிதையினால் நன்கு விளக்கமானபடியினாலும் ஆலாலசுந்தரர், வாகீசர், ஸ்கந்தர், நந்தி, பார்வதி முதலியோர் சாபமடைந்த கதை பல நூல்களிலும் காணப்படுகையினாலும் இன்னும் பிறவாற்றாலும் சிவசாலோக்கிய முதலானவைகளும் துக்கமாமென்பது பசுமரத்தாணியாய் நாட்டப்பட்டதென்க.

சிவசாயுஜ்யமே மோக்ஷமென்று வேதம் விதந்ததை யாமுமக்கறிவித்தமையால் சிவாகம சித்தமான மோக்ஷத்தையே வேதங் கூறியதெனல் தீர்மானமாயிற்று'

என்றார்

சூதசங்கிதை உணத்தகாப்பொருளுரைத்த அத்தியாயத்தில்-

முறையினுலகத்தொருவர்க்குதிக்குமுழுச்சிவஞானம்
மறைமுடிவானுதிப்பதன்றிமற்றொன்றானுதியாது.

என்றும்,

ஆரணத்திற்கவிரோதவாகமச்சார்பினுஞானம்
ஓரணவுதிக்குமெனச்செப்புமால்நான்மறையும்

என்றும்

ஷைபிராமாணிய விசாரத்தில்.

வேறு மார்க்கங்களாலெழுஞானம் வினைதவா அவித்தையேயென்று கூறுவரறிந்தோர்.

என்றும்

ஆரணமார்க்கமொன்றினானேயுண்டாகிடும்புத்திமுத்திகளும்.[

என்றும் சதுர்தசவித்தைகளி லொன்றான புராணம் புகல, இவர் தலைகீழாகப் புரட்டி, 'சிவாகம சித்தமானமோட்சத்தையே வேதங்கூறியதெனல் தீர்மானமாயிற்று' என்று பிரமாணமின்றிக் கூறுதல் பைபிலின் முடிவையும் கொரானது முடிவையும் வேதங் கூறியதெனல் தீர்மானமாயிற்று என்பதற்கினமாய் நிற்பதன்றி மற்றியாதாம்?

இப்படிப்பட்ட வேதபாஹிய பாஷண்டரைக் குறித்தல்லவா

கலியில் அதருமத்தால் தருமமும், பொய்யால்மெய்யும் திருடர்களால் அரசர்களும், பெண்களால் புருஷர்களும் அடக்கப்பட்டுத் தாழ்ந்து விடுவார்கள்.

என்று பாராசரஸ்மிருதி கூறிற்று? இதுகாறும் எழுதியவற்றால் சாதன சதுஷ்டயங்களுக்குச் சரியையாதி கீழென்பது வச்சிரலேபமாக நாட்டப்பட்டதென்க.

இன்னும் வரும்.